DEPOSITION OF WITNESS

**In the Court of III Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

**Session Case No.19/2020**

**Present – B.Saravanan, B.Sc.B.L,**
**III Additional District and Sessions Judge, Tiruchirappalli.**

Prosecution witness

(Chapter XXIII Code of Criminal Procedure)

| | | | | | |
|---|---|---|---|---|---|
| Name | : | செந்தில்குமார் | Caste | : | |
| Father Name | : | பெரியண்ணன் | Calling | : | |
| Village | : | | Religion | : | |
| Taluk | : | | Age | : | |

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969 (Central Act 44 of 1969) on the day of **31.10.2025.**

**PW - 4**

**( 1** முதல் **6** எதிரிகள் ஆஜர்**)**

**முதல் விசாரணை**

நான் துறையூர் வட்டம், வடக்குப்பட்டியில் குடியிருக்கிறேன். விவசாய வேலை செய்கிறேன். இந்த வழக்கில் இறந்துபோன கார்த்திக்கை தெரியாது, அசா.1 பாலமுருகனை தெரியாது. அவர்களது அப்பா, அம்மாவை தெரியும். ஆஜர் 1 முதல் 6 எதிரிகளைத் தெரியும். அவர்கள் எரகுடிதான். நான் இந்த வழக்கு சம்பவம் எதையும் பார்க்கவில்லை. விபத்து நடந்தது பற்றி தெரியாது. அதனால் பிரச்சனை ஏற்பட்டது பற்றியும் தெரியாது. கார்த்திக் என்பவர் இறந்துபோனது பற்றி எனக்கு தெரியாது. இந்த வழக்கு பற்றி எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

*(அரசு தரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக கருதி குறுக்குவிசாரணை செய்ய அனுமதி கோரப்பட்டது, ஆவணங்கள் பரிசீலிக்கப்பட்டு குறுக்குவிசாரணை செய்ய அனுமதி அளிக்கப்பட்டது)*

**அரசு தரப்பில் குறுக்குவிசாரணை**

போலிசார் என்னை விசாரித்தார்கள் என்றும், எனது ஊர் வடக்குப்பட்டியிலிருந்து எரகுடி 2 கிலோமீட்டர் தூரம் இருக்கும். எப்போதாவது ஜாமான் வாங்க எரகுடிக்கு வருவேன். எரகுடி விஏஓ அலுவலகம் முன்பாக வசந்தபவன் என்ற ஓட்டல் 10 ஆண்டுகளுக்கு முன்பு இருந்தது, தற்போது இல்லை. எனக்கு சொந்த ஊர் மெய்யம்பட்டி. திருமணம் செய்தது வடக்குப்பட்டி. என்னை மெய்யம்பட்டி செந்தில்குமார் என்று அழைப்பார்கள். 1 ஆம் எதிரி சரவணின் தாய்மாமா சிதம்பரத்திற்கு ஏற்பட்ட விபத்து பற்றி எனக்கு தெரியாது. கடந்த 25.05.2019 அன்று காலை 08.30 மணியளவில் கார்த்திக் ஒரு காரை எடுத்து ஓட்டினார் என்றும், அதில் விஏஓ அலுவலகம் முன்பு அவர் வந்தபோது சிதம்பரம் என்பவர் மீது மோதி விபத்தை ஏற்படுத்தி நிறுத்தாமல் சென்றுவிட்டார் என்றும், அதனால் சிதம்பரத்தின் உறவினர்களான எதிரிகள் 6 பேரும் கார்த்திக்கை ஆள் வைத்து அழைத்து வந்து விஏஓ அலுவலகம் முன்பு தங்களது கைகளாலும், கால்களாலும் கார்த்திக்கை கீழே போட்டு அடித்து மிதித்தார்கள் என்றும், 1 ஆம் எதிரி சரவணன் ஓட்டல் முன்பாக இருந்தாக கட்டையை எடுத்து கார்த்திக்கின் தலையில் மாறி மாறி அடித்தார் என்றும், நானும் அசா1 பாலமுருகனும்தான் விலக்கி அசா.3 சேகரின் வண்டியில் ஏற்றி மருத்துவமனைக்கு கார்த்திக்கை அனுப்பி வைத்ததாக போலிஸ் விசாரணையில் சொன்னேன் என்றால் சரியல்ல. அன்று மதியம் 02.00 மணியளவில் வீரப்பன் வாழைத்தோட்டம் சமாதியில் கார்த்திக் இறந்துகிடந்ததாக கேள்விபட்டேன் போலிஸ் விசாரணையில் சொன்னேன் என்றால் சரியல்ல. நான் சம்பவத்தைப் பார்த்தேன் என்றும், எதிரிகள் எனக்கு வேண்டியவர்கள் என்பதால் அவர்கள்

கேட்டுக்கொண்டதற்கிணங்க அவர்களை வழக்கிலிருந்து காப்பாற்ற உண்மையை மறைத்து பொய் சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**(எதிரிகள் தரப்பில் இந்த சாட்சியிடம் குறுக்குவிசாரணை இல்லை என்று தெரிவிக்கப்பட்டது)**

திறந்த நீதிமன்றத்தில் சாட்சி சொல்ல சொல்ல என்னால் தட்டச்சருக்கு கூறப்பட்டு தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு படித்து காட்டி சரியென்று ஒப்புக் கொள்ளப்பட்டது.

மூன்றாவது கூடுதல் மாவட்ட அமர்வு நீதிபதி,
திருச்சிராப்பள்ளி.